DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024
Prosecution Witness - P.W. 7

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சுரேஷ்குமார் |
| Father's Name | : | கிறிஸ்டோபர் |
| Village | : | பொன்மனை |
| Taluk | : | திருவட்டார் |
| Calling | : | கூலிவேலை |
| Age | : | 52 |
| Date | : | 09.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>09.09.2025</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் மங்கலத்தில் காலாயவிளாகத்தில் வசிக்கிறேன். நான் மங்கலத்தில் புளிமூடு ஜங்சனில் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். 02.01.2024 அன்று காலை 6 மணியளவில் போலீஸ் ஸ்டேசனிலிருந்து இரண்டு, மூன்று பேர் வந்தார்கள். வந்து எதோ பேப்பரில் எழுதினார்கள், என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவதாக ரவீந்திரன் கையொப்பம் செய்தார்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் **அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

குலசேகரத்திலிருந்து கிழக்காக போக கூடிய ரோடுதான் குலசேகரம் - பொன்மனை ரோடு என்றால் சரிதான். குலசேகரத்திலிருந்து பொன்மனை செல்லும் சாலையில் எனது கடை வலதுபுறம் உள்ளது. கடையை தாண்டி கடை இருக்கும் அதே வரிசையில் பஸ் ஸ்டாப் உள்ளது. பஸ் ஸ்டாப்பின் மேற்கு எல்லையிலிருந்து என் கடையின் கிழக்கு எல்லைக்கு சுமார் 20 அடி தொலைவு இருக்கும் என்றால் சரிதான். எங்கள் கடை மூன்று கடைகளை சேர்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மூன்று கடைகளும் ரோட்டிலிருந்து தெற்கு பக்கம் 70 அடி நீளம் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் கடைக்கு மேற்கு பக்கம் 50 அடி தள்ளி சுகுமாறன் என்பவரின் வீடும், கடையும் உள்ளது என்றால் சரிதான். சுகுமாறன் வீட்டின் கிழக்கு அற்றத்திலிருந்து, அவருடைய கடையின் மேற்கு அற்றம் வரையில் முகப்பின் அகலம் 35 அடி என்றால் சரிதான். சுகுமாறனின் டீக்கடையிலிருந்து 50 அடி தள்ளி ஆசீர்வாதம் என்பவரின் வீடு உள்ளது என்றால் பெயர் தெரியாது, வீடு ஒன்று உள்ளது. அந்த வீட்டின் மேற்கு அற்றத்திலிருந்து 100 அடி தூரத்தில் இறந்துபோன முத்துபிள்ளையின் வீடு என்றால் சரிதான். எனது கடைக்கு எதிர்புறம் மோகனன் நாயரின் வீடு என்றால் சரிதான். அதேபோல ரோட்டில் உள்ள பஸ் ஸ்டாப்பின் எதிர்புறம் ரவீந்திரன் நாயர் வீடு, சுரேஷ் மெடிக்கல் ஸ்டோர் மற்றும் கௌரி மாவுமில் ஆகியவை உள்ளது என்றால் சரிதான். குளச்சவிளாகம் செல்லக்கூடிய ரோட்டின்

கிழக்கு பக்கம் பிராய்லர் கோழிக்கடை ஒன்று உள்ளது என்றால் சரிதான். எனது கடை காலை எத்தனை மணிக்கு திறப்பேன் என்றால் 9 மணியளவில் திறந்து 1 மணிக்கு அடைப்பேன். பிறகு சாப்பிட்டு விட்டு 6 மணியளவில் திறப்பேன். சுரேஷ் மெடிக்கல் ஸ்டோர், கௌரி மாவுமில் மற்றும் பிராய்லர் கோழிக்கடை ஆகியவை முழு நேரமும் திறந்திருக்கும் என்றால் மதிய உணவு சமயத்தில் அடைத்துவிடுவார்கள். மீண்டும் 4, 5 மணியளவில் திறப்பார்கள். ரவீந்திரன் நாயர் வீட்டிலும், மோகனன் நாயர் வீட்டிலும் ஆள்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். எனது கடையை சாதாரணமாக எல்லா நாள்களிலும் காலை 9 மணிக்கு திறந்துவிடுவேனா என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்ததாக சொல்லும் 2 ஆம் தேதிக்கு முன்னரும் எல்லா நாட்களிலும் காலை 9 மணிக்கு திறந்து வைத்திருப்பேனா என்றால் ஆமாம். நான் கையொப்பம் செய்ததாக சொல்லும் ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று வாசித்து பார்த்தேனா என்றால் இல்லை. போலீசார் கேட்டதற்கு ஒரு கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றாலும் அதை தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். பஸ் ஸ்டாப்பை போலீசாருக்கு அடையாளம் காட்டிக் கொடுத்தது யார் என்றால் அது எனக்கு தொியாது.